தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 01.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 16039/F/2023**

Thiru.E.Jean Prabhu, -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி, -- பொது அதிகார அமைப்பு
தூத்துக்குடி மாவட்டம்-628 002.

******

**ஆணை**

இவ்வாணையம் 27.05.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.லெ.வெங்கட்ராமன், உதவி ஆணையர், கிழக்கு மண்டலம், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி-628 002 மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.சு.பாலசுந்தரம், உதவி ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி ஆகியோர்கள் 01.07.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி மனுதாரருக்கு தகவல்கள் ந.க.எண்.அ1/3188/2023/கி.ம, நாள் 25.06.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றின் நகல் மற்றும் Tracking Consignment-ன் நகல் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தில் தான் 31.07.2024 அன்று ஒய்வு பெற்றுவிட்டதாகத் தெரிவித்த எழுத்துமூல கடிதம் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூல கடிதத்தில் பணிச்சுமை காரணமாக உரிய காலத்திற்குள் பதில் வழங்க இயலவில்லை என்று தெரிவித்து தனது எழுத்துமூல

கடிதத்தினையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்கையில், அப்போதைய மேல்முறையீட்டு அலுவலரின் விளக்கத்தினை ஆணையம் ஏற்கிறது. மேலும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துமூல விளக்கம் ஏற்புடையதல்ல என்பதை ஆணையம் பதிவு செய்து, ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- **இன்றைய விசாரணையில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.சு.பாலசுந்தரம், உதவி ஆணையர், தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் சமர்ப்பித்த விளக்கத்தினை ஆணையம் ஏற்கவில்லை. மேலும், மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல்களை வழங்காத (03.07.2023 தேதிய) அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், உதவி ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம் அவர்களுக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1)-ன் கீழ் அபராதம் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) விதிக்கப்படுகிறது. மேலும், அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்துவிட்டு அதுகுறித்த அறிக்கையினை அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், அவர்கள் 14.07.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேலும், அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16039/F/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்-628 002.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்,**
**திரு.பாலசுந்தரம்,**
**கணக்கு அலுவலர்,**
**தூத்துக்குடி மாநகராட்சி,**
**தூத்துக்குடி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் (21.04.2023 தேதிய),**
**தூத்துக்குடி மாநகராட்சி,**
**தூத்துக்குடி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

Thiru.E.Jean Prabhu,
88 B, S.P.G. Kovil,
3rd Street, Thoothukudi,
Thoothukudi-628 002.

**<u>நகல்</u>**

இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, நகர்ப்புற நிர்வாகக் கட்டிடம்,
சாந்தோம் உயர்சாலை,
MRC நகர், ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For Followup).

Copy to: File NS/PA-